THE HINDU
4 MAY 2024

## IN BRIEF



# SC hears plea on candidates named after political leaders

The Supreme Court on Friday took up a public interest petition claiming that rival political parties are propping up persons with the same names as popular political leaders to hoodwink voters with a logical question. "If their parents have given them the same names, can we come in the way of their right to contest elections? If somebody is named 'Rahul Gandhi' or 'Lalu Prasad Yadav' by their parents, how can the court prevent them from participating in elections as candidates?" Justice B.R. Gavai asked advocate V.K. Biju, the counsel representing the petitioner, Sabu Steephen. After a short hearing, Mr. Biju chose to withdraw the petition.

THE TIMES OF INDIA
- 4 MAY 2024

# Six CCTV cameras in Villupuram strong rooms malfunction

Times News Network


**Villupuram:** The six CCTV cameras in six strong rooms where EVMs used for polling in the recently concluded Lok Sabha polls in the Villupuram reserved parliamentary constituency are kept, malfunctioned for at least 30 minutes on Friday. The surveillance cameras in the strong rooms suddenly stopped working at 9.28am and technicians from the Tamil Nadu Electricity Board in the presence of district officials attended to the problem. They repaired the faulty CCTVs and the cameras resumed operation at 9.58am on Friday. This is the fourth instance in the state in which CCTV cameras in the strong rooms ceased working for a few minutes.

VCK candidate for the Villupuram parliamentary constituency and sitting MP D Ravikumar lodged a complaint with the returning officer of the constituency, urging him to follow the Election Commission of India's (ECI) directive and take all necessary measures to safeguard the polled EVMs kept in the strong rooms.

In a letter addressed to the returning officer, Ravikumar said Ayyappan, assigned by him to monitor the strong room, informed him over his mobile phone that the surveillance cameras stopped working at 9.28am on Friday. The cameras resumed operation at 9.58am after they were repaired.

The district collector and district Superintendent of Police inspected the six strong rooms in the presence of people assigned by candidates. "This occurrence is unprecedented during elections. Reports indicate similar incidents in some other constituencies in Tamil Nadu raising concerns," Ravikumar said in the letter.

**VCK candidate for the Villupuram parliamentary constituency and sitting MP D Ravikumar lodged a complaint with the returning officer of the constituency, urging him to follow the ECI directive and take all necessary measures to safeguard the polled EVMs**



It may be recalled that one of the 220 CCTV cameras installed at the strong rooms at IRTT Engineering College at Chithode in Erode district lost signal on April 29 while another CCTV camera in the same college encountered a similar problem on April 30. District collector and election officer Raja Gopal Sunkara said the wire connecting a CCTV camera to the monitor was disconnected disrupting live streaming on April 30. The issue was resolved in two hours.

In another incident, CCTV cameras in the strong room in Nilgiris parliamentary constituency faced a technical glitch for at least 20 minutes on April 27. Nilgiris collector M Aruna said there was a technical error in CCTV cameras because of overheating and lack of ventilation. The CCTV cameras were not recording for 20 minutes from 6.40pm on April 27.

THE NEW INDIAN EXPRESS

4 MAY 2024

# CCTVs go blank at Villupuram strong room

**EXPRESS NEWS SERVICE**
@ Villupuram

SURVEILLANCE cameras monitoring the strong rooms in Villupuram parliamentary constituency stopped functioning for 20 minutes on Friday.

According to an official release by returning officer C Palani, there was a disruption in CCTV coverage and electrical equipment due to a fault in the UPS system. It was fixed immediately in the presence of representatives of political parties.

VCK's D Ravikumar said in a statement that this incident raises questions about electoral integrity and security protocols.

DT Next
4 MAY 2024
Chennai, Saturday, May 4, 2024

# Short circuit snaps Villupuram EVM strongroom surveillance

**CHENNAI: Surveillance mechanism in place for the EVM strongroom at Arignar Anna Government Arts College in Villupuram was down for nearly 30 minutes on Friday. It was the third such incident reported in the state in the last six days and it created a flutter for a while.**

Officials said that live streaming of the strongroom in Villupuram had been disturbed for nearly 30 minutes from 9.28 am on Friday due to power fluctuation. Erratic power supply blew the fuse of the UPS (Uninterrupted Power Supply) connected to the live streaming of the CCTV cameras that focused at the sealed doors of the strongrooms.

On information, Villupuram Returning Officer and Collector C Palani rushed to the counting centre and took measures. The officials from Tangedco also rushed to the spot and checked the power supply to the counting centre. The livestreaming was restored by 9.58 am. The Collector instructed the Tangedco officials to ensure uninterrupted and reliable power supply to the centre.

The Collector also took the agents of candidates in the fray to the strongroom to ensure everything was in place and ruled out any suspicion. "The officials have installed an additional live-streaming to the existing one to avoid such problems," said VCK candidate D Ravikumar, who petitioned the Collector to take appropriate measures to avoid such incidents till the counting day on June 4.

Ravikumar also cited the Election Commission's communication on Standard Operating Procedure on security arrangements for the counting centres. "There is a specific direction to ensure uninterrupted power supply to the counting centres during the EVM storage period. The Collector should ensure that," he added.

TN Chief Electoral Officer Satyabrata Sahoo directed the DEOs to take precautionary measures in all the 39 centres to guarantee reliable power supply to the respective counting centres to avoid short-circuit.

இந்து தமிழ் திசை

4 MAY 2024

## விழுப்புரம் தொகுதி வாக்கு எண்ணிக்கை மையத்தில்


# மின் தடையால் கேமராக்கள் செயலிழப்பு

● **விழுப்புரம்**

விழுப்புரம் (தனி) மக்களவைத் தொகுதி வாக்கு எண்ணிக்கை மையத்தில் 30 நிமிடங்கள் மின்சாரம் தடைபட்டது.

விழுப்புரம் மக்களவைத் தொகுதியில் கடந்த ஏப். 19-ம் தேதி பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், மூன்று அடுக்கு பாதுகாப்புடன் விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளன.

இந்நிலையில், நேற்று காலை 9.30 மணியளவில் மின் தடை ஏற்பட்டது. அப்போது, யுபிஎஸ்-ல் ஏற்பட்ட பழுது காரணமாக சிசிடிவி கேமராக்கள் மற்றும் மின் சாதனங்கள் இயங்கவில்லை.



↑ விழுப்புரம் மக்களவைத் தொகுதியின் வாக்கு எண்ணிக்கை மையத்தில் ஏற்பட்ட மின்தடையால், சிசிடிவி கேமராக்கள் மற்றும் மின் சாதனங்களில் ஏற்பட்ட பழுதை சரி செய்யும் ஊழியர்கள்.


சுமார் 30 நிமிடங்களுக்குப் பின்னர், மக்களவைத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் பழனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் ஸ்வாட்ச் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் பழுது சரி செய்யப்பட்டது.

**விசிக வேட்பாளர் மனு**

இதற்கிடையில், விழுப்புரம் தொகுதி விசிக வேட்பாளர் ரவிக்குமார், மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனுவில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையில் மின் பழுது ஏற்படாத வகையில், உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

Due to power cut the CCVT cameras surveillance were stopped for 30 minutes at Villupuram strong room in Tamil Nadu.

தினத்தந்தி
4 MAY 2024



விழுப்புரம் தொகுதி வாக்கு எண்ணும் மையத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்கள் இயங்காததால், கட்டுப்பாட்டு அறையில் காட்சிகள் இல்லாமல் டெலிவிஷன்கள் இருக்கும் காட்சி.

விழுப்புரம்

# வாக்கு எண்ணும் மையத்தில் கண்காணிப்பு கேமராக்கள் இயங்காததால் பரபரப்பு

விழுப்புரம், மே.4-

விழுப்புரம் வாக்கு எண்ணும் மையத்தில் கண்காணிப்பு கேமராக்கள் இயங்காததால் பரபரப்பு ஏற்பட்டது. $\frac{1}{2}$ மணி நேரத்தில் சரி செய்யப்பட்டதாக கலெக்டர் பழனி விளக்கம் அளித்துள்ளார்.

## கண்காணிப்பு கேமராக்கள் இயங்கவில்லை

விழுப்புரம் தொகுதியில் நாடாளுமன்ற தேர்தலில் வாக்குப்பதிவுக்குப் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் அனைத்தும் விழுப்புரம் கீழ் பெரும்பாக்கம் வாக்கு எண்ணும் மையமான அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டதுடன், 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று காலை 9.28 மணிக்கு வாக்கு எண்ணும் மையத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்கள் திடீரென இயங்கவில்லை. இதனால் வாக்கு எண்ணும் மையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

## பழுது சரி செய்யப்பட்டது

அங்கிருந்த அரசியல் கட்சி முகவர்கள், தேர்தல் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். விழுப்புரம் நாடாளுமன்ற தொகுதி தேர்தல் அலுவலரும், மாவட்ட கலெக்டருமான பழனி வாக்கு எண்ணும் மையத்துக்கு விரைந்து வந்து மின் ஊழியர்கள், தொழில்நுட்ப குழுவினருடன் கண்காணிப்பு கேமராக்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது கண்காணிப்பு கேமராக்கள் இயங்க பயன்படுத்தப்பட்ட யூ.பி.எஸ். எந்திரத்தில் பழுது ஏற்பட்டதால் கண்காணிப்பு கேமராக்கள் இயங்காதது தெரியவந்தது.

இதையடுத்து தொழில்நுட்ப குழுவினர் யூ.பி.எஸ்.சில் ஏற்பட்ட பழுதை சரி செய்தனர். அதன்பிறகு காலை 9.58 மணிக்கு மேல் கண்காணிப்பு கேமராக்கள் செயல்பட தொடங்கியது. இப்பிரச்சினையால் வாக்கு எண்ணும் மையத்தில் $\frac{1}{2}$ மணி நேரம் கண்காணிப்பு கேமராக்கள் இயங்கவில்லை.

## கலெக்டர் விளக்கம்

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் பழனி வெளியிட்டுள்ள அறிக்கையில்

வாக்கு எண்ணும் மையத்தில் காலை சுமார் 9.30 மணியளவில் யூ.பி.எஸ்.சில் ஏற்பட்ட பழுது காரணமாக சி.சி.டி.வி. கேமராக்கள் மற்றும் மின் சாதனங்களில் தடை ஏற்பட்டது. அந்த பழுதை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு தீபக் சிவாச் மற்றும் அ.தி.மு.க. வேட்பாளரின் முகவர் தமிழரசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளரின் முகவர் அய்யப்பன் ஆகியோர் முன்னிலையில் உடனடியாக சரிசெய்யப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

Due to power cut the ccvt cameras surveillance were stopped for 30 minutes at villupuram strong room in Tamil Nadu

தினகரன்
4 MAY 2024

நீலகிரி, ஈரோட்டை தொடர்ந்து விழுப்புரம் மக்களவை தொகுதிக்கான

# வாக்குப்பதிவு இயந்திர அறையில் 20 நிமிடங்கள் இயங்காத கேமரா

## யூபிஎஸ்சில் பியூஸ் போனதால் மின்தடை என கலெக்டர் தகவல்



▶ சிசிடிவி கேமரா பழுதானதால் டிவி திரையில் நோ சிக்னல் என காட்சியளித்தது.

விழுப்புரம், மே. 4: நீலகிரி, ஈரோட்டை தொடர்ந்து விழுப்புரம் மக்களவை தொகுதிக்கான வாக்குபதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்ட அறையில் சிசிடிவி கேமரா 20 நிமிடம் இயங்காததால் பரபரப்பு ஏற்பட்டது.

தமிழகத்தில் கடந்த மாதம் 19ம் தேதி ஒரே கட்டமாக மக்களவை தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது. இந்த தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணிக்கைக்காக அந்தந்த தொகுதி வாக்கு எண்ணும் மையங்களில் வைக்கப்பட்டு துணை ராணுவம், ஆயுதப்படை உள்ளிட்ட 3 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அதன்படி விழுப்புரம் மக்களவை தொகுதியில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரில் 6 சட்டமன்ற தொகுதிகள் வாரியாக வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளன. அங்கு 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அறையை சுற்றிலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு வேட்பாளர்கள், அவர்களின் முகவர்களும் கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று காலை 9.30 மணியளவில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் அறையில் உள்ள சிசிடிவி கேமராக்கள் இயங்கவில்லை. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. சிசிடிவி கேமராக்கள் பழுதை ஊழியர்கள் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். சுமார் 20 நிமிடங்களில் பின் கேமராக்கள் மீண்டும் இயங்க தொடங்கியது. கேமாரக்கள் பழுது குறித்து இந்த தொகுதியின் விசிக வேட்பாளர் ரவிக்குமார் எம்பி, தேர்தல் நடத்தும் அலுவலரான கலெக்டர் பழனியிடம் புகார் அளித்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், 'விழுப்புரம் நாடாளுமன்றத் தொகுதிக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைத்திருக்கும் அறைகளில் நேற்று காலை 9.28 மணி அளவில் திடீரென்று கண்காணிப்புக் கேமராக்கள் நின்று விட்டன. அவை சரி செய்யப்பட்டு 9.58 மணி அளவில் மீண்டும் இயங்க தொடங்கின. தேர்தல் நடத்தும் அதிகாரி விரைந்து வந்து மின்னிணைப்பு சம்பந்தமான அதிகாரியையும் நேரில் வரவழைத்து, கவனத்துடன் இருக்கவேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்' என்றார்.

விழுப்புரம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரான ஆட்சியர் பழனி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில், நேற்று காலை 9.30 மணியளவில் யூபிஎஸ்சில் ஏற்பட்ட பழுது காரணமாக சிசிடிவி கேமராக்கள் மற்றும் மின்சாதனங்களில் தடை ஏற்பட்டது. இந்த பழுதை அதிகாரிகள் மற்றும் விசிக, அதிமுக வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் உடனடியாக சரிசெய்யப்பட்டது' என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் நீலகிரி, ஈரோடு மக்களவை தொகுதிகளில் பதிவான வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளில் சிசிடிவி கேமராக்கள் பழுதானது குறிப்பிடத்தக்கது.

Due to power cut the ccvt camera Surveillance were stopped for 30minutes at villupuram strong room in Tamil nadu

DECCAN CHRONICLE

5 MAY 2024

# GCC Commissioner inspects counting centres

**More than 200 thanneer pandals across the city provide free drinking water**

DC CORRESPONDENT
CHENNAI, MAY 4

Greater Chennai Corporation (GCC) Commissioner and district electoral officer, J. Radhakrishnan, inspected the counting centres on Saturday.

According to GCC, the Commissioner carried out inspections at counting stations for reviewing safety and security measures put in place there.

He, along with poll officials, checked the CCTV cameras installed in the centres where electronic voting machines are stored. The officials are satisfied with the functioning of cameras, it said.

Later, Radhakrishnan visited various places in the city where thanneer pandals have been set up by GCC. The Corporation has installed more than 200 thanneer pandals across the city to provide free drinking water to pedestrians and commuters.

Regional deputy commissioner (RDC) (south) Amith, and RDC (central) Praveen, and zonal officers in Teynampet and Adyar accompanied the Commissioner.

இந்து தமிழ் திசை

5 MAY 2024

திருப்புவனம் அருகே வாக்குச்சாவடியில்

# தேர்தல் அதிகாரியை தாக்கியதாக கிராம நிர்வாக அலுவலர் சஸ்பெண்ட்

● திருப்புவனம்

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே தேர்தல் உதவி மண்டல அலுவலரைத் தாக்கியதாக, கிராம நிர்வாக அலுவலர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

திருப்புவனம் அருகே மாங்குடியில் கடந்த ஏப்.19-ம் தேதி வாக்குப்பதிவு முடிந்ததும் இரவு 10 மணிக்கு அந்த வாக்குச்சாவடியிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்துச்செல்ல மண்டல அலுவலர் குழு சென்றது. அந்தக் குழுவில், உதவி மண்டல அலுவலராக கொந்தகை வருவாய் ஆய்வாளர் முத்துமுருகன் இடம் பெற்றிருந்தார்.

அப்போது முத்துமுருகன் மீதான முன்விரோதத்தில், மாங்குடி கிராம நிர்வாக அலுவலர் (விஏஓ) அன்புச்செல்வன் மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த 15 பேர் அவரை தாக்கியுள்ளனர். இதனால் வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்துச் செல்வதில் தாமதம் ஏற்பட்டது. திருப்புவனம் போலீஸார் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, ஒன்றரை மணி நேரம் தாமதமாக வாக்குப்பதிவு இயந்திரங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

இதனால், அந்த மண்டலத்துக்கு உட்பட்ட மற்ற வாக்குச்சாவடிகளில் இருந்தும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்துச் செல்வதில் தாமதம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, உதவி மண்டல அலுவலர் முத்துமுருகன் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அன்புச்செல்வன் ஆகியோர் தனித்தனியாக அளித்த புகாரின் பேரில் திருப்புவனம் போலீஸார் வழக்கு பதிவு செய்தனர்.

மாவட்ட தேர்தல் அதிகாரி உத்தரவின்பேரில், சிவகங்கை கோட்டாட்சியரும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலருமான விஜயகுமார் விசாரணை மேற்கொண்டார். அதன் பேரில், கிராம நிர்வாக அலுவலர் அன்புச்செல்வனை பணியிடை நீக்கம் செய்து, மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார். மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் அனுமதி பெறாமல் அன்புச்செல்வன் திருப்புவனம் வட்டத்தை விட்டு வெளியேறவும் தடை விதித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க மாநிலச் செயலாளர் தமிழரசன் கூறுகையில், 'மண்டல உதவி தேர்தல் அலுவலர் மீது தாக்குதல் நடத்திய கிராம நிர்வாக அலுவலர் மீது மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்ததை வரவேற்கிறோம்.

மேலும், அவருடன் சேர்ந்து தாக்கியதோடு, வாக்குப்பதிவு இயந்திரங்கள், தேர்தல் ஆவணங்களை எடுத்துச் செல்வதை தாமதப்படுத்திய 15 பேரையும் கைது செய்ய வேண்டும் என்றார்.

VAO has been suspended for attacking the Election Assistant Zonal officer in Sivagangai district, Tamilnadu.

தினமணி

- 4 MAY 2024


# விழுப்புரம் வாக்கு இயந்திர அறையில் செயலிழந்த கண்காணிப்பு கேமராக்கள்

விழுப்புரம், மே 3: விழுப்புரம் மக்களவைத் தொகுதியில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில் யுபிஎஸ் பழுது காரணமாக வெள்ளிக்கிழமை 30 நிமிஷங்கள் கண்காணிப்பு கேமராக்கள் செயல்பாடுகள் முடங்கின. பின்னர், இந்தக் கோளாறு சரிசெய்யப்பட்டது.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு கடந்த ஏப். 19-ஆம் தேதி நடைபெற்றது. விழுப்புரம் தொகுதிகளுக்குட்பட்ட 6 பேரவைத் தொகுதிகளில் பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலை, அறிவியல் கல்லூரி மையத்தில் பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டு

கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

**யுபிஎஸ் பழுது:** இந்த பாதுகாப்பு அறைகளில் வெள்ளிக்கிழமை காலை சுமார் 9.30 மணிக்கு திடீரென கேமராக்களின் செயல்பாடுகள் முடங்கின. மின்சாதனங்களிலும் தடை ஏற்பட்டது.



விழுப்புரத்தில் கண்காணிப்பு கேமராக்களின் இயக்கத்தை கண்காணிக்கும் மையத்தில் வெள்ளிக்கிழமை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் சி.பழனி, எஸ்.பி. தீபக் சிவாச்.

தகவலறிந்த மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் ஆட்சியருமான சி.பழனி, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச் ஆகியோர் கண்காணிப்பு கேமராக்களின் இயக்கத்தை கண்காணிக்கும் மையத்துக்கு உடனடியாக வந்து பார்வையிட்டனர். யுபிஎஸ்ஸில் ஃபியூஸ் போனதால் மின்தடை ஏற்பட்டு, அதனால் கண்காணிப்பு கேமராக்கள் இயங்காதது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட அலுவலர்களை நேரில் வரவழைத்து, யூபிஎஸ்ஸில் ஏற்பட்ட பழுது சரி செய்யப்பட்டது. இதையடுத்து, காலை 10 மணிக்கு கண்காணிப்பு கேமராக்கள், மின்சாதனங்கள் தொடர்ந்து இயங்கத் தொடங்கின.

**விசிக வேட்பாளர் மனு:** கண்காணிப்பு கேமரா செயலிழந்த தகவலறிந்து விழுப்புரம் தொகுதி விசிக வேட்பாளர் துரை. ரவிக்குமார், மாவட்ட ஆட்சியரகத்துக்கு வந்து ஆட்சியரிடம் மனு அளித்தார். அதில், பாதுகாப்பு அறைகளில் மின்சாதனங்களில் பழுது ஏற்படாதவகையில் தேர்தல் அலுவலர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார்.

Due to power cut the CCVT cameras surveillance was stopped for 30 minutes at Villupuram Strong room in Tamilnadu.

தினமணி
5 MAY 2024

# 8 வாக்குச்சாவடிகளில் மறு தேர்தல் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்

## பாஜக வேட்பாளர் ஏ.சி.சண்முகம்

வேலூர், மே 4: வேலூர் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட 8 வாக்குச் சாவடிகளில் மறுதேர்தல் நடத்துவது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்று பாஜக வேட்பாளரும், புதிய நீதிக்கட்சியின் நிறுவனர் தலைவருமான ஏ.சி.சண்முகம் தெரிவித்தார்.

தேர்தல் வாக்குப்பதிவின் போது அணைக்கட்டு மலைக்கிராமங்களான பீஞ்சமந்தை, தென்டூர், தொங்குமலை, பலாம்பட்டு, ஜார்தான்கொல்லை ஆகிய இடங்களிலுள்ள வாக்குச்சாவடி எண் 142, 143, 144, 145, 146, 147, 148, 149 ஆகிய 8 வாக்குச் சாவடிகளில் பாஜக கூட்டணி கட்சி வாக்குச் சாவடி முகவர்கள் யாரையும் திமுகவினர் அனுமதிக்கவில்லை. வாக்காளர்களும் சுதந்திரமாக வாக்களிக்க முடியவில்லை.

இதுகுறித்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, இந்த 8 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு நடத்த வேண்டும் எனக் கூறி இந்த தொகுதியின் பாஜக வேட்பாளரும், புதிய நீதிக்கட்சியின் நிறுவனர் -தலைவருமான ஏ.சி.சண்முகம் கடந்த 10 நாட்களுக்கு முன்பு மாநில தேர்தல் ஆணையருக்கும், தொகுதி தேர்தல் அலுவலருக்கும் மனு அனுப்பியிருந்தார். எனினும், அவரது புகார் மீது இதுவரை தேர்தல் ஆணையம் தரப்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், ஏ.சி.சண்முகம் வேலூரில் சனிக்கிழமை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது -

மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவின்போது அணைக்கட்டு பேரவை தொகுதி பீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை, பாலாம்பட்டு என மூன்று ஊராட்சி மலைக்கிராமங்களில் உள்ள வாக்குச்சாவடிகளில் பாஜக கூட்டணி முகவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இதுகுறித்து அப்போதே மாவட்ட தேர்தல் அலுவலர், தேர்தல் பார்வையாளர் ஆகியோரிடம் புகார் தெரிவித்தோம். அந்த மூன்று பஞ்சாயத்துகளிலும் மறு தேர்தல் நடத்த வேண்டும் என்றும் எழுத்துபூர்வமாக கேட்டிருக்கிறோம்.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் சார்பில் ஏதும் நடக்கவில்லை என்றால், நீதிமன்றத்தில் வழக்கு தொடருவோம். இதேபோல், குடியரசுத் தலைவர், இந்திய தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் துறையிடமும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போதைக்கு நீதிமன்றம் செல்ல இயலாது. தேர்தல் நடவடிக்கைகள் முடிந்தால்தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும்.

வேலூர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட 6 பேரவை தொகுதிகளில், கூட்டணி நிர்வாகிகளிடம் தொகுதி நிலவரம் குறித்து கேட்டறிந்தேன். சுமார் 1 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றிபெறுவேன் என்று தெரிவித்துள்ளனர். தமிழகத்தை பொருத்தவரை 15 தொகுதிகளில் பாஜ கூட்டணி வெற்றிபெறும். தேசிய அளவில் 400 தொகுதிகளுக்கு மேல் வெற்றிபெறும். புதிய நீதிக்கட்சியை பொருத்தவரை ஜூன் 4-ஆம் தேதிக்கு பிறகு வளர்ச்சி பெறும் என்றார்.

BJP party Candidate Thiru A.C Shanmugam has Submitted a Petition in Court for Repolling at 8 Booths at Vellore district.

The Hindu (English), Dated: 06.05.2024

# Campaigning ends in 94 Lok Sabha constituencies

**Devesh Kumar Pandey**
NEW DELHI

The 48-hour silence period in 94 Lok Sabha constituencies spread across 12 States and Union Territories commenced at 6 p.m. on Sunday with the conclusion of campaigning for the third phase of the Lok Sabha election. Voting will take place on Tuesday.

Polling for more than half of the total number of constituencies will be completed by the end of this phase.

Among the prominent contestants in the fray in the third phase are Union Ministers Amit Shah (Gandhinagar, Gujarat), Pralhad Joshi (Dharwad, Karnataka), and Jyotiraditya Scindia (Guna, Madhya Pradesh), former Madhya Pradesh Chief Minister Shivraj Singh Chouhan (Vidisha, Madhya Pradesh), Congress leader Digvijaya Singh (Rajgarh, Madhya Pradesh), Samajwadi Party's Dimple Yadav (Mainpuri, Uttar Pradesh), and Nationalist Congress Party (NCP) MP Supriya Sule (Baramati, Maharashtra).



**Ready, set:** Buses for Lok Sabha election duty parked at the Lal Parade Ground in Bhopal on Sunday. A.M. FARUQUI

Section 126 of the Representation of the People Act, 1951 prohibits election campaign activities through public meetings and processions and display of election matter by means of television and similar platforms, during the silence period.

"In a multi-phased election, the silence period of last 48 hours may be on in certain constituencies while campaign is ongoing in other constituencies. In such an event, there should not be any direct or indirect reference amounting to soliciting support for parties or candidates in the constituencies observing the silence period," according to the Election Commission (EC).

CONTINUED ON
» PAGE 10

## From Page One

## Campaigning ends in 94 LS constituencies

"During the silence period, star campaigners and other political leaders should refrain from addressing the media by way of press conferences and giving interviews on election matters," the EC holds.

The process of filing nominations for the 94 constituencies in the third phase began on April 12. The last date for filing nominations was April 19.

This phase will cover the 25 constituencies of Gujarat, where the BJP candidate from Surat has been elected unopposed; two of Goa (North Goa and South Goa); and the remaining 14 constituencies in Karnataka.

Bhind, Bhopal, Guna, Gwalior, Morena, Rajgarh, Sagar, and Vidisha in Madhya Pradesh are also scheduled to vote on Tuesday.

In Assam, the constituencies of Dhubri, Kokrajhar, Barpeta and Guwahati will go to the polls. In Bihar, polls will be conducted in the Jhanjharpur, Supaul, Araria, Madhepura, and Khagaria constituencies. In Chhattisgarh, the constituencies of Surguja, Raigarh, Janjgir-Champa, Korba, Bilaspur, Durg, and Raipur will go to the polls. In Maharashtra, polls will be held for the Baramati, Raigad, Osmanabad, Latur, Solapur, Madha, Sangli, Satara, Ratnagiri-Sindhudurg, Kolhapur, and Hatkanangle seats.

Also going to the polls in the third phase are Sambhal, Hathras, Agra, Fatehpur Sikri, Firozabad, Mainpuri, Etah, Budaun, Aonla, and Bareilly in Uttar Pradesh; Maldaha Uttar, Maldaha Dakshin, Jangipur, and Murshidabad in West Bengal; and the Union Territories of Dadra and Nagar Haveli, and Daman and Diu.

Voting in Jammu and Kashmir's Anantnag-Rajouri constituency has been rescheduled for May 25 in the sixth phase.

The Hindu (English)

Dated: 06.05.2024



K.V. Rajendranath Reddy

# EC orders transfer of A.P. DGP, two other officers

**The Hindu Bureau**
VIJAYAWADA

The Election Commission (EC) on Sunday asked the Andhra Pradesh government to transfer Director-General of Police (DGP) K.V. Rajendranath Reddy with immediate effect.

The EC did not mention the reason for the move.

The EC, in its orders, also said that Mr. Reddy should not be assigned any election-related work. The Lok Sabha and Assembly elections will be held in the State on May 13.

The EC asked the State government to send the names of three DG-rank officers for the post of the DGP by 11 a.m. on Monday.

It also ordered the transfer of Anantapur Urban DSP G. Veeraraghava Reddy and Rayachoti DSP Syed Mahbub Basha. They were ordered to hand over their responsibilities to their subordinates immediately. The EC ordered their transfer after investigating complaints from the TDP leaders, who alleged the duo harassed the party cadre and foisted false cases on them.

The EC transferred 12 IAS and IPS officers of the State in the last one month.

Deccan Chronicle

Dated: 06.05.2024

# Race for party ticket picks up for Vikravandi bypoll

N RAVIKUMAR | DC
CHENNAI, MAY 5:

The Election Commission of India (ECI) has not confirmed reports that the bypoll to the Vikravandi Assembly seat in Tamil Nadu could be held along with the 7th phase of Lok Sabha elections on June 1, but political parties are not taking any chance and are keeping themselves prepared for such a possibility.

If the by-poll is to be held on June 1, the notification is expected on May 7, along with the notification for 57 Lok Sabha constituencies in the 7th phase. As the model code of conduct is already in force, the TN Chief Electoral Officer and district election officer can conduct the by-poll easily. Though there is time till September to conduct the poll, holding it along with the 7th phase would save additional work of another revision of voters and arranging EVMs and counting centres.

PMK founder S. Ramadoss had issued a statement saying that the ECI should not take an arbitrary decision and consult the political parties before deciding the date of the bypoll. He said Tamil Nadu is experiencing heat wave conditions since dog days had started from May 4. He said campaigning during the scorching summer would affect the health of party cadre and functionaries. However, leaders of other parties have not reacted to the reports or expressed their opposition to such a plan.

The race for getting the election ticket in Vikravandi is stiff in the ruling DMK since the functionaries consider the bypoll to be a smooth sail for it, especially when the AIADMK and the PMK are in separate alliances. When the previous by-poll was held for Vikravandi along with the 2019 Lok Sabha elections, the AIADMK won the seat with the support of the PMK. In the 2021 Assembly elections, the DMK won the seat polling 48.41 percent votes while the AIADMK received 43.47 percent.

There are many DMK contenders for the seat including Villupuram district panchayat president Jayachandran, Agricultural labourers wing state secretary 'Anniyur' Siva, former municipal chairman Janagaraj, panchayat union secretary Ravi and former MLA Pugazhendhi's son Selvakumar. Former AIADMK MLA R. Muthamizh Selvan and panchayat union secretary Panneer are also seeking the seat.

PMK polled around 41,000 votes in Vikravandi when it contested alone in the 2016 Assembly elections and its choice could be between its district leaders Anbumani and Pugazhendhi. The BJP has negligible presence in the constituency, but former DMK MLA A.G. Sampath is now in the BJP and he could contest with PMK support. Naam Thamizhar Katchi (NTK) is planning to field Virugambikai Manoj, daughter of J. Guru.

DECCAN CHRONICLE
6 MAY 2024

# Campaigning in 92 seats ends; voting tomorrow

DC CORRESPONDENT
NEW DELHI, MAY 5


Jailed Delhi Chief Minister Arvind Kejriwal's wife Sunita Kejriwal during a roadshow in support of party's candidate from South Delhi Sahi Ram Pehalwan for Lok Sabha polls in Delhi on Sunday. — PTI

The high-voltage campaign for the third phase of Lok Sabha election ended on Sunday in 92 seats spread over 11 states and Union territories.

Voters in states such as Gujarat, Chhattisgarh, Bihar and Madhya Pradesh, which overwhelmingly opted for the NDA last time, will pick their choices on May 7, making the phase very critical for the ruling alliance.

As the BJP has bagged the Surat seat unopposed, all the remaining 25 seats in Gujarat will go to polls in the third phase. The other states include Maharashtra (11) Uttar Pradesh (10), Karnataka (14) Madhya Pradesh (8), Chhattisgarh (7), Bihar (5), four each in Assam and West Bengal, and all two in Goa.

Prime Minister Narendra Modi took an aggressive Hindutwa posture during the third phase, accusing the INDIA bloc of plotting to conduct a survey of the assets of the people and hand them over to the minorities, especially the Muslims. He also alleged that the Opposition alliance was planning to cut down on the reservation in jobs and admissions in educational institutions for Scheduled Castes, Scheduled Tribes and Other Backward Classes and hand them over to the Muslims.

The INDIA bloc, especially the Congress, hit back saying the NDA was planning to amend the Constitution and end the reservation. Congress leader Rahul Gandhi has been on record saying the INDIA bloc will do away with the cap of 50 per cent in reservations if it came to power at the centre. Alliance leaders Samajwadi party's Akhilesh Yadav and RJD's Tejashwi Yadav focused on the worsening unemployment scene in the country.

The NDA received a setback with the alleged videos of sexual harassment of women by its candidate Prajwal Revanna in Hassan started spreading in the state, hitting its prospects in the remaining 14 seats which will go to polls on May 7.

இந்து தமிழ் திசை

6 MAY 2024

### கடந்த 1951-52- ம் ஆண்டு மக்களவை தேர்தலில்

# பெயர் சொல்ல விரும்பாத பெண்கள் இந்திய தேர்தல் ஆணையம் குழப்பம்

என்.மகேஷ்குமார்



சுதந்திர இந்தியாவில் 1951–52–ல் முதன் முறையாக ஜனநாயக முறைப்படி மக்களவை தேர்தல் நடைபெற்றது. அப்போது இந்திய தேர்தல் ஆணையத்துக்கு புதிய பிரச்சினை தலை தூக்கியது. வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போது, ஏராளமான பெண்கள் தங்களின் பெயர்களை கூற விரும்பவில்லை. அதற்குப் பதில், அவர்களின் கணவர் பெயரையோ அல்லது தந்தை, அண்ணன், தம்பி ஆகியோரின் பெயர்களையோ குறிப்பிட்டு, அவர்களுக்கு இவர்கள் என்ன உறவோ அதனை தெரிவித்தனர். பிஹார், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்பிரச்சினை அதிகமாக இருந்தது.

அந்த கால கட்டத்தில் நாட்டின் பெண் வாக்காளர்கள் ஏறக்குறைய 8 கோடி பேர் இருந்தனர். இவர்களில் சுமார் 30 லட்சம் பேர் தங்களின் கணவர் அல்லது தந்தையின் பெயரை சொல்லி, அவர்களின் மனைவி அல்லது மகள் என கூறியிருந்தனர். இதனால் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதில் சிக்கல் ஏற்பட்டது. எனினும், பெண்கள் தங்களின் பெயர்களை கூற சுமார் ஒரு மாதம் வரை கால அவகாசத்தை தேர்தல் ஆணையம் வழங்கியது. அதன் பிறகு, பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த பெண்கள் சிலர் மட்டுமே தங்களின் பெயர்களை கூறினர். ராஜஸ்தான் பெண்கள் யாரும் பெயர் கூறவில்லை. இதனால் ஒரு மாத கால அவகாசத்துக்கு பின்னர், மீதமிருந்த சுமார் 28 லட்சம் பெண்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை.


கடந்த 26.1.1950–ம் ஆண்டு இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. இதற்கு ஒரு நாள் முன்னர், 25.1.1950–ல் இந்திய தேர்தல் ஆணையம் உருவானது. இந்த ஆணையம் இதுவரை 17 மக்களவை தேர்தல்களை நடத்தியுள்ளது. முதன்முறை தேர்தலை நடத்தும்போது இந்திய தேர்தல் ஆணையம் பல சவால்களை எதிர்கொண்டது. அந்த கால கட்டத்தில் கல்வி அறிவு இல்லாதவர்கள் அதிகம். இதனால் கல்வியறிவை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது ஆண் வாக்காளர்களை விட பல தொகுதிகளில் பெண் வாக்காளர்களே அதிக எண்ணிக்கையில் வாக்குப்பதிவில் ஆர்வமுடன் கலந்து கொள்கின்றனர்.

கடந்த 1951–52 மக்களவை தேர்தலில் ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தை தவிர நாடு முழுவதும் 17.3 கோடி வாக்காளர்கள் இருந்தனர். இதில், 45 சதவீதம் பேர் பெண் வாக்காளர்கள். கடந்த 2019–ல் மொத்த வாக்காளர்கள் 91.1 கோடி. அவர்களில் 43.85 கோடி பேர் பெண் வாக்காளர்கள். ஆண்கள் 47.34 கோடி. முதல் மக்களவை தேர்தலில் பெண்களுக்காக 27,527 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. கடந்த 2019–ல் 67.4 கோடி வாக்காளர்கள் பங்கேற்றனர். அவர்களில் ஆண்களை விட பெண் வாக்காளர்களின் சதவீதமே அதிகம். அப்போது மொத்தம் 67.18 சதவீதம் பெண்கள் வாக்களித்தனர். 67.01% ஆண் வாக்காளர்கள் வாக்களித்தனர். 2024 மக்களவை தேர்தலில் 47.1 கோடி பெண் வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர். 12 மாநிலங்களில் ஆண்களைவிட பெண் வாக்காளர்களே அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

An article regarding 1951 election, woman refused to say their names.

இந்து தமிழ் திசை
6 MAY 2024






↑ சென்னையில் உள்ள வாக்கு எண்ணிக்கை மையங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள துணை ராணுவத்தினர் மற்றும் போலீஸார்.

Police & paramilitary force are in the Security work at chennai counting centers

இந்து தமிழ் திசை

6 MAY 2024

3-வது கட்ட மக்களவை தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தது

# 94 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு

- நாடு முழுவதும் 10 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசத்தில் 1,352 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். வாக்குச்சாவடிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுடெல்லி

மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம், குஜராத், கர்நாடகா, மத்திய பிரதேசம், மேற்கு வங்கம் உட்பட நாடு முழுவதும் 10 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 94 தொகுதிகளில் 3-ம் கட்ட மக்களவை தேர்தல் பிரச்சாரம் நேற்று ஓய்ந்தது. இங்கு நாளை காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

நாடு முழுவதும் மக்களவை பொதுத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. கடந்த ஏப்ரல் 19-ம் தேதி முதல் கட்ட தேர்தல் 21 மாநிலங்களில் உள்ள 102 தொகுதிகளில் நடைபெற்றது. இரண்டாம் கட்ட தேர்தல் ஏப்ரல் 26-ம் தேதி 13 மாநிலங்களில் உள்ள 89 தொகுதிகளில் நடைபெற்றது.

இந்நிலையில், 3-ம் கட்டமாக 10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 94 தொகுதிகளில் நாளை காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

அசாம் மாநிலத்தில் 4, பிஹார் 5, சத்தீஸ்கர் 7, தத்ரா நகர் ஹவேலி மற்றும் டாமன் டையூ யூனியன் பிரதேசங்கள் 2, கோவா 2, குஜராத் 25, கர்நாடகா 14, மத்திய பிரதேசம் 9, மகாராஷ்டிரா 11, உத்தர பிரதேசம் 10, மேற்கு வங்கம் 4 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

**தேர்தல் தள்ளிவைப்பு**

காஷ்மீரின் அனந்த்நாக் - ரஜோரி மக்களவை தொகுதியிலும் நாளை தேர்தல் நடக்க இருந்தது. பனிப் பொழிவு காரணமாக நெடுஞ்சாலை முடப்பட்டதால், இத்தொகுதியில் வாக்குப்பதிவு மே 25-ம் தேதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசத்தின் பெதுல் தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் காலமானதால் ஏற்கெனவே தள்ளிவைக்கப்பட்டிருந்த தேர்தல் நாளை நடைபெறுகிறது.

நாளை நடைபெறும் 3-வது கட்ட தேர்தலில் மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ஜோதிர் ஆதித்ய சிந்தியா மற்றும் டிம்பிள் யாதவ், சிவராஜ் சிங் சவுகான், ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, திக்விஜய் சிங், சுப்ரியா சுலே உட்பட மொத்தம் 1,352 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

10 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்களில் கடந்த சில நாட்களாக தேர்தல் பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்றது. ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், வீடு வீடாக சென்று வாக்கு சேகரிப்பு என பல்வேறு கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், இத்தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலை 6 மணியுடன் ஓய்ந்தது.

கடைசி நாளான நேற்று உத்தர பிரதேசத்தின் எட்டாவா மற்றும் தவுரஹ்ரா ஆகிய இடங்களில் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் பிரதமர் மோடி பேசினார்.

அயோத்தியில் நேற்று மாலை நடைபெற்ற பிரம்மாண்ட ஊர்வலத்திலும் பிரதமர் மோடி பங்கேற்றார். சுக்ரீவ் கிலாவில் இருந்து லதா சவுக் வரை சுமார் 2 கி.மீ. தூரத்துக்கு இந்த ஊர்வலம் நடைபெற்றது. மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் நிர்வாகிகளும் உடன் சென்றனர்.

பிரச்சாரம் முடிவடைந்த நிலையில், 94 தொகுதிகளிலும் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதையொட்டி, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



↑ உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் நேற்று நடைபெற்ற பிரச்சார ஊர்வலத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார். அவருக்கு பொதுமக்கள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். உடன், மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்.

**பிரதமர் மோடி 14-ல் மனு தாக்கல்**

உத்தர பிரதேச மாநிலம் வாராணசி தொகுதியில் ஜூன் 1-ம் தேதி கடைசி கட்ட தேர்தல் நடைபெறுகிறது. இங்கு பாஜக சார்பில் பிரதமர் மோடி போட்டியிடுகிறார்.


கடந்த 2019 மக்களவை தேர்தலில் பிரதமர் மோடி 6,74,664 வாக்குகள் (63.63%) பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் அஜய் 1,52,548 வாக்குகள் பெற்றார். இந்நிலையில், பிரதமர் மோடி மீண்டும் வாராணசி தொகுதியில் போட்டியிடுகிறார்.

இந்நிலையில், வாராணசி பாஜக தலைவர் வித்யாசாகர் ராய் கூறியபோது, "வாராணசி தொகுதியில் பிரதமர் மோடி வரும் 13-ம் தேதி பிரம்மாண்ட ஊர்வலம் நடத்துகிறார். அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. மறுநாள் 14-ம் தேதி அவர் வேட்புமனு தாக்கல் செய்கிறார்" என்று தெரிவித்தார்.

3rd phase election at 10 States will be conduct tomorrow

இந்து தமிழ் திசை

6 MAY 2024



↑ இந்திய தேர்தல் நடைமுறை குறித்து சர்வதேச அளவில் புரிதலை ஏற்படுத்தும் நோக்கில் இந்திய தேர்தல் ஆணையம் 'சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் நிகழ்வை' ஒருங்கிணைத்துள்ளது. இதில் கலந்துகொள்ள 23 நாடுகளின் பிரதிநிதிகள் இந்தியா வந்துள்ளனர். நேற்று டெல்லியில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெளிநாட்டு பிரதிநிதிகளை வரவேற்கும் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர்கள் ஞானேஷ் குமார் மற்றும் சுக்பீர் சிங் சாந்து. படம்: பிடிஐ

The ECI has organized an international Election observers meet to create the understanding of the Indian election process 23 countries Representatives have been participate in the meeting Honble CEC Thiru Rajiv Kumar, Election commissioners thiru Gyanesh Kumar & Thiru Dr. Sukhbir Singh Sandhu welcomed the representatives at Delhi.

இந்து தமிழ் திசை
6 MAY 2024

# நயினார் நாகேந்திரனிடம் விசாரிக்க முடிவு

## ரூ.4 கோடி பறிமுதல் விவகாரத்தில் சிபிசிஜடி நடவடிக்கை

● சென்னை

ரயிலில் ரூ.4 கோடி பறிமுதல் செய்யப்பட்ட விவ்காரத்தில் நயினார் நாகேந்திரனிடம் விசாரணை நடத்த சிபிசிஜடி போலீஸார் முடிவு செய்துள்ளனர்.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலையொட்டி தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அதன்படி, கடந்த மாதம் 6-ம் தேதி சென்னை எழும்பூரிலிருந்து திருநெல்வேலி நோக்கி புறப்பட்ட நெல்லை விரைவு ரயிலில் உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்து செல்லப்பட்ட ரூ.4 கோடி பணத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

பணத்தை கொண்டு சென்றதாக பாஜக நெல்லை மக்களவை தொகுதி வேட்பாளரும், எம்எல்ஏவுமான நயினார் நாகேந்திரனின் ஆதரவாளர்களான சென்னை கொளத்தூர் திரு.வி.க.நகரைச் சேர்ந்த சதீஷ், அவரது தம்பி நவீன், தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் பகுதியை சேர்ந்த பெருமாள் ஆகிய 3 பேரை தாம்பரம் போலீஸார் கைது செய்தனர். இந்த பணத்தை நயினார் நாகேந்திரனுக்கு கொண்டு செல்வதாக அவர்கள் தெரிவித்தனர். இதை நயினார் நாகேந்திரன் திட்டவட்டமாக மறுத்தார்.

இதற்கிடையே இவ்வழக்கின் விசாரணையை சிபிசிஜடிக்கு மாற்றி டிஜிபி சங்கர் ஜிவால் உத்தரவிட்டார். அதன்படி, சிபிசிஜடி பிரிவு போலீஸார் 4 பிரிவுகளின் கீழ் தனியாக வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர். முதல் கட்டமாக ரயிலில் ரூ.4 கோடி பிடிபட்ட விவகாரம் தொடர்பாக ரயிலில் பணத்துடன் பிடிபட்ட சதீஷ், நவீன், பெருமாள் ஆகிய 3 பேரிடம் நேரில் அழைத்து விசாரணை நடத்தினர்.

அதைத் தொடர்ந்து நயினார் நாகேந்திரனின் உறவினர் எனக் கூறப்படும் முருகன், முருகனிடம். பணியாற்றும் ஆசைத்தம்பி, ஜெய்சங்கர் ஆகியோரிடம் சென்னை எழும்பூரில் உள்ள தலைமை அலுவலகத்தில் வைத்து சிபிசிஜடி போலீஸார் விசாரணை நடத்தி முடித்துள்ளனர். அவர்கள் அளித்த தகவல்களை வாக்குமூலமாக பதிவு செய்து கொண்டுள்ள போலீஸார் அதை வீடியோவாகவும் பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கில் அடுத்த கட்டமாக பாஜக பிரமுகர் கோவர்த்தனிடமும் போலீஸார் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளனர். கோவர்த்தன் தற்போது உடல் நலக்குறைவால் நீலாங்கரையில் உள்ள அவரது வீட்டிலேயே உள்ளார். விசாரணைக்கு அவரால் முழு ஒத்துழைப்பு கொடுக்க முடியுமா என்பதை அறிவதற்காக 2 தினங்களுக்கு முன்னர் சிபிசிஜடி போலீஸார் அவரது வீட்டுக்கு சென்றுள்ளனர்.

உடல் நலக்குறைவால் நேரில் அழைத்து விசாரணை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டால், சட்ட விதிமுறைகளை பின்பற்றி ஓரிரு தினங்களில் அவர் வீட்டுக்கே சென்று விசாரணை நடத்தவும் போலீஸார் முடிவு செய்துள்ளனர். அடுத்த கட்டமாக நயினார் நாகேந்திரனிடமும் போலீஸார் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளனர். இதற்கான நடவடிக்கையும் தொடங்கி உள்ளதாக போலீஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

CBCID has decided to investigate Thiru Nainar Nagendran regarding 4 crore seized at Tambaram railway station issue.

தினத்தந்தி

6 MAY 2024



டெல்லியில் நடந்த சந்திப்பில், நாடாளுமன்ற தேர்தலை பார்வையிட வந்துள்ள வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் தலைமை தேர்தல் கமிஷனர் மற்றும் தேர்தல் கமிஷனர்கள் கூட்டாக புகைப்படம் எடுத்துக்கொண்ட காட்சி.

நாடாளுமன்ற தேர்தலை பார்வையிட வந்துள்ள

# 23 நாடுகளின் பிரதிநிதிகளுடன் தேர்தல் கமிஷனர்கள் சந்திப்பு

புதுடெல்லி, மே.6-

நாடாளுமன்ற தேர்தலை பார்வையிட வந்துள்ள 23 நாடுகளின் பிரதிநிதிகளை தேர்தல் கமிஷனர்கள் சந்திக்கும் நிகழ்ச்சி நடந்தது.

## பார்வையிட ஏற்பாடு

இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் நடந்து வருகிறது. கடந்த மாதம் 19 மற்றும் 26-ந் தேதிகளில் 2 கட்ட தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. நாளை (செவ்வாய்க்கிழமை) 3-வது கட்ட தேர்தல் நடக்கிறது.

ஜூன் 1-ந் தேதியுடன் தேர்தல் முடிவடைகிறது. ஜூன் 4-ந் தேதி வாக்கு எண்ணிக்கை நடக்கிறது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவாக கருதப்படும் இந்திய நாடாளுமன்ற தேர்தலை வெளிநாட்டு பிரதிநிதிகள் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் திட்டத்தின் ஒரு அங்கமாக இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய தேர்தலில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகளை வெளிநாட்டு பிரதிநிதிகள் அறிந்துகொள்வதே இதன் நோக்கம் ஆகும்.

## 23 நாடுகளின் பிரதிநிதிகள்

பூடான், மங்கோலியா, ஆஸ்திரேலியா, மடகாஸ்கர், பிஜி, கிர்கிஸ் குடியரசு, ரஷியா, மால்டோவா, துனிசியா, செஷல்ஸ், கம்போடியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், இலங்கை, ஜிம்பாப்வே, வங்காளதேசம், கஜகஸ்தான், ஜார்ஜியா, சிலி, உஸ்பெகிஸ்தான், மாலத்தீவு, பபுவா நியூகினியா, நமிபியா ஆகிய 23 நாடுகளின் தேர்தல் அமைப்புகளை சேர்ந்த 75 பிரதிநிதிகள், இந்திய நாடாளுமன்ற தேர்தலை பார்வையிடுகிறார்கள்.

அவர்கள் நேற்று முன்தினம் இந்தியா வந்துசேர்ந்தனர். சர்வதேச தேர்தல் அறக்கட்டளை உறுப்பினர்களும், பூடான், இஸ்ரேல் ஆகிய நாடுகளின் ஊடக குழுவினரும் வந்துள்ளனர்.

இவ்வளவு அதிகமான பிரதிநிதிகள் இந்திய தேர்தலை பார்வையிட வந்திருப்பது இதுவே முதல்முறை ஆகும்.

## 6 மாநிலங்களுக்கு பயணம்

75 பிரதிநிதிகளும் தனித்தனி குழுக்களாக பிரிந்து மராட்டியம், கோவா, குஜராத், கர்நாடகா, மத்தியபிரதேசம், உத்தர பிரதேசம் ஆகிய 6 மாநிலங்களுக்கு இன்று (திங்கட்கிழமை) செல்கிறார்கள்.

அங்கு பல்வேறு தொகுதிகளுக்கு நேரில் சென்று வாக்குப்பதிவையும், தேர்தல் தொடர்பான முன்னேற்பாடுகளையும் பார்வையிடுகிறார்கள். 9-ந் தேதி வரை அவர்கள் பார்வையிடும் நிகழ்ச்சி நடக்கிறது.

## சந்திப்பு

இந்நிலையில், 75 பிரதிநிதிகளுடன் தேர்தல் கமிஷனர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நேற்று டெல்லியில் நடந்தது. தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார், தேர்தல் கமிஷனர்கள் கியானேஷ் குமார், சுக்பிர்சிங் சாந்து ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், தலைமை தேர்தல் கமிஷனர் ராஜீவ்குமார் பேசியதாவது:-

உலக ஜனநாயக திருவிழாவில், இந்திய தேர்தல் கமிஷன் மேற்கொள்ளும் பணிகள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்திய தேர்தல்கள் தனித்துவமானவை. இங்கு வாக்காளராக பதிவு செய்வது கட்டாயம் இல்லை, வாக்களிப்பதும் கட்டாயம் இல்லை. எனவே, தேர்தல் கமிஷன் வாக்காளர் பட்டியலில் தாமாக முன்வந்து பெயர் சேர்க்குமாறு வாக்காளர்களை அழைக்க வேண்டி இருக்கிறது.

## 97 கோடி வாக்காளர்கள்

அவர்களை வாக்களிக்க செய்வதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த வேண்டி இருக்கிறது. வாக்குப்பதிவு சதவீதத்தின் மூலம் எங்கள் பணியின் நம்பகத்தன்மை உறுதி செய்யப்படுகிறது. 97 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 10 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் ஒன்றரை கோடிக்கு மேற்பட்ட தேர்தல் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

வாக்காளர்களின் பன்முகத்தன்மையை வாக்குச்சாவடிகளில் வெளிநாட்டு பிரதிநிதிகள் முழுமையாக காணலாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளின் தலைமை தேர்தல் கமிஷனர்களுடன் தேர்தல் கமிஷன் இருதரப்பு ஆலோசனையில் ஈடுபட்டது.

## எந்திரங்களின் செயல்பாடு

முன்னதாக, வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு தேர்தல் கமிஷன் பல்வேறு விளக்கங்களை அளித்தது.


மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் ஒப்புகைசீட்டு எந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து மூத்த துணை தேர்தல் கமிஷனர் நிதேஷ் குமார் விளக்கம் அளித்தார். தகவல் தொழில்நுட்ப முன்முயற்சிகள், ஊடகம் மற்றும் சமூக வலைத்தளங்களின் பங்கு ஆகியவை பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

News regarding International Election observers meet at Delhi

தினமணி

6 MAY 2024

## உலக பார்வையாளர்கள்...




மக்களவைத் தேர்தலைப் பார்வையிடுவதற்காக இந்தியா வந்துள்ள 23 நாடுகளின் பிரதிநிதிகளுடன் தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார், ஆணையர்கள் ஞானேஷ் குமார், சுக்பிர் சிங் சாது.

News regarding international Election observers met at Delhi

தினமணி

1-6 MAY 2024

# வாக்கு எண்ணிக்கை முகவர் நியமனம்: வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணையம் கட்டுப்பாடு

**சென்னை, மே 5:** வாக்கு எண்ணிக்கையின் போது, தங்களது முகவராக யார், யாரை வேட்பாளர்கள் நியமிக்கலாம் என்பது தொடர்பாகதேர்தல் ஆணையம்பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.



தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு முடிவடைந்த நிலையில், வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ஆம் தேதி நடைபெறவுள்ளது. தேர்தலில் பதிவான வாக்குகளை கொண்ட மின்னணு இயந்திரங்கள் அனைத்தும் 39 மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. வாக்குகள் எண்ணிக்கை பணிக்காக அதிகாரிகள், அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**வேட்பாளர்களுக்கு கடிதம்:** வாக்கு எண்ணிக்கையின்போது ஒவ்வொருமேஜையிலும்வேட்பாளர்கள் சார்பில் இருக்க வேண்டிய முகவர்களின் எண்ணிக்கை குறித்து தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் கடிதம் எழுதியுள்ளனர். அந்தக் கடித விவரம்:

மக்களவைத் தொகுதிக்குள்பட்ட ஒவ்வொரு சட்டப் பேரவைத் தொகுதி வாரியாக முகவர்களை நியமிக்க வேண்டும். ஒரு தொகுதியில் 14 மேஜைகள் அமைக்கப்பட்டிருந்தால் ஒரு மேஜைக்கு ஒருவர் வீதம் 14 முகவர்களையும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மேஜையில் ஒரு முகவரையும் நியமிக்க வேண்டும்.

அத்துடன், தபால் வாக்குச் சீட்டுகளை எண்ணுமிடத்தில் ஒரு மேஜைக்கு ஒருவர் வீதம் ஆறு மேஜைக்கு ஆறு முகவர்களை நியமனம் செய்ய வேண்டும்.

தபால் வாக்குச் சீட்டு எண்ணுமிடத்தில் ஒரு தேர்தல் நடத்தும் அலுவலர் இருப்பார். அவருடன் ஒரு முகவரையும், தபால் வாக்கு உறைகளை ஸ்கேனிங் செய்யும் அறையில் ஒரு முகவரையும் நியமிக்க வேண்டும். ஒரு மக்களவை தொகுதியில், ஆறு சட்டப் பேரவைத் தொகுதிகள் இருந்தால், ஒவ்வொரு பேரவைத் தொகுதிக்கும் 15 நபர்கள் வீதம் 90 முகவர்களை அரசியல் கட்சிகள் நியமிக்க வேண்டும். தபால் வாக்கு எண்ணும் மேஜைகள் மற்றும் தபால் வாக்கு உறைகளை ஸ்கேனிங் செய்யும் அறை ஆகிய இடங்களில் எட்டு முகவர்களை நியமனம் செய்ய வேண்டும். மொத்தமாக ஒரு மக்களவைத் தொகுதிக்கு ஒரு வேட்பாளர் சார்பில் 98 முகவர்களை நியமிக்க வேண்டும்.

**என்னென்ன தகுதிகள்?:** வேட்பாளர்களின் சார்பில் நியமிக்கப்படும் முகவர்கள் ஒவ்வொருவரும் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். இதற்கென வரையறுக்கப்பட்ட படிவம் 18-இல் முகவர்களின் பெயர்கள், கையொப்பத்துடன் இரண்டு புகைப்படங்களையும் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**யாரை நியமிக்கக் கூடாது:** அதேபோல, முகவர்களாக் யாரை நியமிக்கக் கூடாது என்ற வரையறைகளையும் தேர்தல் ஆணையம் வகுத்துள்ளது.

அதன்படி, மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள், சட்டப் பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர், நகர்மன்றத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், மத்திய, மாநில பொதுத்துறை நிறுவனங்களின் தலைவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து நிறுவனங்களின் பகுதி நேர உறுப்பினர்கள், நியாய விலைக் கடை, சத்துணவு, அங்கன்வாடி, சுகாதார மையங்களில் பணியாற்றும் ஊழியர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோரை முகவர்கள் நியமிக்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ECI has given an instructions to candidates for Appointment of counting agents